# பேராதனைப் பல்கலைக்கழகம்.

## தொடர் தொலைக் கல்வி நிலையம்.

### முதல் கலைப் பரீட்சை (வெளிவாரி) டிசம்பர் 2018

**சுற்றாடற் கல்வி (SUPE - 008)**

**அறிவுறுத்தல்:** எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. இவ்வினாப்த்திரத்தில் எல்லாமாக ஏழு (07) வினாக்கள் உள்ளன.

**நேரம்: மூன்று மணித்தயாலங்கள்**

---

(01) (i) சூழல் தொகுதி ஒன்றின் உயிர்க்கூறுகளுக்கு இடையிலான இடைத்தொடர்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) பூகோளரீதியாக சூழல் தொகுதிகளில் மாற்றம் ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விவரிக்குக. (15 புள்ளிகள்)

(02) (i) உலகின் ஐந்து (05) பிரதான சூழல் தொகுதிகளை அடையாளம் கண்டு, அவற்றின் குணாதிசயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) அவற்றில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து, அதன் சூழலியல் முக்கியத்துவம் பற்றி விளக்குக. (15 புள்ளிகள்)

(03) (i) உயிர்ப்பல்லினத்தன்மையின் ஐந்து (05) சூழலியல் முக்கியத்துவங்களை எழுதுக. (05புள்ளிகள்)

(ii) அயன மண்டலத்தில் உயிர்ப்பல்லினத்தன்மை தரமிழப்பிற்கான பிரதான அச்சுறுத்தல்களை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) உயர்ப்பல்லினத்தன்மையினைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் கடைபிடிக்கப்படுகின்ற உபாயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

(04) (i) இயற்கை சுற்றாடலின் மூன்று (03) பிரதான இயற்கை வட்டங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) குறிப்பிட்ட இயற்கை வட்டங்களின் தொழிற்பாடு பற்றி பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(iii) மேற்குறிப்பிட்டவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவுசெய்து அதில் மனிதன் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றான் என்பது பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| (05) | | பூகோள காலநிலை மாற்றமானது எவ்வாறு இயற்கை சுற்றாடலில் தாக்கம் செலுத்துகின்றது என்பது பற்றி பொருத்தமான உதாரணங்களுடன் விவரிக்குக. | (25 புள்ளிகள்) |
| (06) | (i) | இலங்கையில் பிரதான சுற்றாடல் பிரச்சினைகள் ஐந்து (05) இனை இனம் காண்க. | (05 புள்ளிகள்) |
| | (ii) | மேலே குறிப்பிட்டவற்றுள் ஏதாவது இரண்டினைத் தெரிவு செய்து, இலங்கையின் சுற்றாடலில் குறிப்பிட்ட சுற்றாடல் பிரச்சினை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பது பற்றி விளக்குக. | (20 புள்ளிகள்) |
| (07) | | பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு (02) பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக. | |
| | (i) | சூழல் தொகுதியில் சக்திப் பாய்ச்சல். | (12.5 புள்ளிகள்) |
| | (ii) | இலங்கையில் காடழிப்பு. | (12.5 புள்ளிகள்) |
| | (iii) | இயற்கை சூழல் தொகுதியில் மானிட தாக்கம். | (12.5 புள்ளிகள்) |
| | (iv) | உள் நிலை மற்றும் வெளி நிலை பாதுகாப்பு முறைகள் | (12.5 புள்ளிகள்) |